பெறுநர் 15-04 2015

செயலாளர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும்
பகிர்மானக் கழகம்,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002

ஐயா,

பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம் – 4ம் பிரிவு – அலுவலக உதவியாளர்கள், தபேதார்கள், மற்றும் களப்பிரிவு தொழிலாளர்களுக்கு ஈட்டா விடுப்பினை பணமாக்கும் சலுகையை விஸ்தரிக்க வேண்டுவது.

பார்வை : 1) தமிழ்நாடு மின்சார வாரிய கணக்குப் பிரிவை தவிர்த்த இதர பணியாளர்களுக்கு 27-10 1965ல் ஒப்புதல் அளிக்கப் பட்ட நிலையாணை விதிகள்.

2) தமிழ்நாடு மின்சார வாரிய கணக்குப் பிரிவு பணியாளர்களுக்கு 01-08 1969ல் ஒப்புதல் அளிக்கப் பட்ட நிலையாணை விதிகள்.

- 3) ஊதிய உயர்வு – தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின் கீழ்

---

நாளன்று ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தம்.

-- 4) வாரிய உத்திரவு எண் 94 நாள்.20 11 1985.

---- தமிழ்நாடு மின்சார வாரிய, கணக்குப் பிரிவை தவிர்த்த இதர பணியாளர் களுக்கு 27 10 1965ல் ஒப்புதல் அளிக்கப் பட்ட நிலையாணை விதிகளும், தமிழ்நாடு மின்சார வாரிய கணக்குப் பிரிவு பணியாளர்களுக்கு 01 08 1969ல் ஒப்புதல் அளிக்கப் பட்ட நிலையாணை விதிகளும் தற்சமயம் நடைமுறையில் உள்ளன.

கணக்குப் பிரிவை தவிர்த்த இதர தொழிலாளர்களுக்கு விடுப்பு(**LEAVE**) சலுகையைப் பற்றி நிலையாணைவிதி 19லும், கணக்குப் பிரிவு தொழிலாளர்களுக்கு விடுப்புச் சலுகையைப் பற்றி நிலையாணைவிதி 13க்கான **A** என்ற இணைப்பிலும், அலுவலக உதவியாளர்கள் மற்றும் தபேதார்களுக்கு நிலையாணைவிதி 13க்கான **B** என்ற இணைப்பிலும், வரையறை செய்யப்பட்டிருந்தது.

-- நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு சம்மந்தமாக தொழிலாளர் ஆணையர் முன்பு 21 10 1985 அன்று தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் பிரிவு 11ல் கீழ்கண்ட ஷரத்து சேர்க்கப் பட்டது.

" **ONLEAVE ON PRIVATE AFFAIRS TO THE REGULAR WORK ESTABLISHMENT WORKMEN** :

Leave on Private Affairs on half Pay for six months in all and three months at any one time with be allowed to the employees borne on the Regular Work Establishment in revised scale of pay of and above Rs.620-~~20-7~~20 25 845 30 995.

-------- In the case of Office Helpers and Duffadars and Regular Work Establishment workmen in the scale of pay Rs.510 10 560 15 635 20 735 25 860, Leave on Private Affairs on half Pay will be subject to the following.

a) Eligibility after 15 years of regular service only
b) After 15 years of service but below 25 years of service – three months
c) After 25 years of service, the spell of leave not availed during 15-25 years and another three months. "

மேற்கண்ட ஈட்டாவிடுப்புச் சலுகையானது பணியாளர்கள் தங்களது பணிக் காலத்தில் விடுப்பு எடுத்துக் கொள்வதற்கு மட்டுமே வழங்கப் பட்டது. விடுப்பை பணமாக்கிக் கொளவதற்கான சலுகை இதில் கிடையாது.

---- ஈட்டா விடுப்பினை பணமாக்கிக் கொள்வதற்கான சலுகை வாரிய உத்திரவு எண் 75, நாள் 06 11 1996ல் அமுல் படுத்தப் பட்டு ஓராண்டுக்குப் பின் வாரிய உத்திரவு எண் 76, நாள் 11 09 1997ல் நிறுத்தப் பட்டுவிட்டது. பின்னர் தொழிற்சங்கங்களின் முறையீட்டினை ஏற்று வாரிய ஆணை (PER) CMD TANGEDCO PROCEEDINGS NO.52 , DATED THE 14TH FEBRUARY, 2014.ன் படி ஈட்டாவிடுப்பினை பணமாக்கிக் கொள்ளும் சலுகை மீண்டும் ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகிறது.

இந்நிலையில் வாரியத்தில் பணியாற்றி ஓய்வுபெறும் அலுவலகஉதவியாளர்கள், தபேதார்கள் மற்றும் குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் காவலர்கள், துப்புறவாளர்கள், கள உதவியாளர்கள் முதலிய 21 பிரிவு களத் தொழிலாளர்களுக்கும் 15 ஆண்டுகள் நிரந்தரப் பணி முடித்தவர்களுக்கு 15 முதல் 25 ஆண்டுவரை 3 மாதமும், 25 ஆண்டுகளுக்கு மேல் பணி முடித்தவர்களுக்கு மேலும் 3 மாதமும்தான் பணமாக்கும் சலுகை வழங்கப் படும் என்று கூறப் படுகிறது.

இதனால் மேற்கண்ட ஊழியர்கள் பெரிதும் பாதிப்புகுள்ளாகிறார்கள். குறிப்பாக 15 ஆண்டுகளுக்குள் இறந்துவிட்டால் / ஓய்வு பெற்றுவிட்டால் அவர்களுக்கு ஈட்டா விடுப்பினை பணமாக்கும் சலுகை கிடையாது என்று கூறப்படுகிறது. மேலும் 25 ஆண்டுகளுக்குள் ஓய்வு பெற்றாலோ இறந்து விட்டாலோ 3 மாத விடுப்பைதான் பணமாக்க முடியும்.

அலுவலக உதவியாளர்கள், தபேதார்கள் மற்றும் கடைநிலையில் உள்ள களப் பிரிவு ஊழியர்கள் விடுப்பு எடுப்பதை கட்டுபடுத்திட வேண்டும் என்பதற்காக வரையறுக்கப்பட்ட

நிலையாணை விதிகளை அவர்கள் ஓய்வு பெறுகின்ற அல்லது இறந்துவிடுகின்ற நிலையினில் பெறுகின்ற ஈட்டா விடுப்பை பணமாக்கும் சலுகைக்கு எதிராகப் பயன்படுத்துவது நியாயமல்ல என்பதையும் நிலையாணை விதியின் நோக்கமும் அதுவல்ல என்பதை அருள்கூர்ந்து பரிசீலித்து நிலையாணை விதிகளுக்கு உண்மையான உணர்வு பூர்வமான விளக்கத்தினை தந்து மின்வாரியத்தில் பணிபுரியும் இதர அலுவலர்கள், தொழிலாளர்கள் பெறுகின்ற பலனை அலுவலக உதவியாளர்கள், தபேதார்கள் மற்றும் கடைநிலையில் உள்ள களப் பிரிவு ஊழியர்களும் பெறும் வகையில் தக்கதொரு உத்திரவினை விரைவில் வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்